பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 197

வியாழக்கிழமை
12 ஜூன் 2025

வைகாசி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

கோப்பாயில் மட்டும்

## வீடுகளற்ற நிலையில் 2,080 குடும்பங்கள்!

விரிவு பக்: 15

ஜூன் 25ஆம் திகதியன்று



# யாழ்ப்பாணத்துக்கு வருகின்றார் மனித உரிமைகள் ஆணையர்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், ஜூன் மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார் என்று உறுதியான வகையில் அறியமுடிகின்றது.

15

## தரமற்ற மருந்து இறக்குமதி ரணிலிடம் தீவிர விசாரணை

கொழும்பு, ஜூன் 12

நாட்டுக்குள் தரமற்ற மருந்துகள் இறக்குமதிசெய்யப் பட்டமை தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தால் நேற்றுத் தீவிர விசாரணை நடத்தப்பட் டுள்ளது.

15

## அடிப்படைவாத நபர்களின் அரசியலுக்குள் தையிட்டி!

அனுமதிக்கப்போவதில்லை என அரசாங்கம் திட்டவட்ட அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 12

யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினையை, சில அடிப்படைவாதக் குழுக்கள் அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்த முற்படுகின்றன - இவ் வாறு அமைச்சரவைப் பேச்சாள ரும், அமைச்சரு மான நளிந்த

15



## நல்லூரில் கூட்டாட்சி வீட்டுக்குள் புகுந்தது மான்

புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்து

யாழ்ப்பாணம், ஜூன் 12

நல்லூர் பிரதேசசபையில் ஆட்சியமைப்பது தொடர் பில், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் மக்கள் கூட்டணிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

15

## பொதுமன்னிப்பில் மோசடி; மன்னிப்புக்கு இடமேயில்லை!

அமைச்சர் நளிந்த திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதியின் பொதுமன் னிப்பைத் தவறாகப் பயன் படுத்தி இடம்பெற்ற மோச டிகள் தொடர்பில் முழுமை யான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த விடயத்தில் தவறி ழைத்தவர்களுக்கு எதிரா கக் கடும் நடவடிக்கை எடுக் கப்படும் என்று அமைச்சர வைப் பேச்சாளரும், அமைச்சரு மான நளிந்த

15

விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த

## நெடியவனைச் சந்திக்கவே அநுர ஜேர்மனிக்குப் பயணம்

புரளி கிளப்புகின்றார் கம்மன்பில

விரிவு பக்கம் 15




மின்சாரப் பட்டியல்

## அச்சுவேலி ப.நோ.கூ.ச. கட்டடத்தில் இராணுவத்தின் நிலுவை ரூ.140,000

யாழ்ப்பாணம், ஜூன் 12

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தை இராணுவமே பயன்படுத்திவந்தநிலையில், அந்தக் கட்டடத்தின் மின்சார நிலுவையாக ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா காணப்படுகின்றது என்று சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச ஒருங் கிணைப்புக்குழுக் கூட்டம்

15

யாழ். கடற்கரைகளில்

## பிளாஸ்ரிக் துகள்கள் பெருமளவு கரையொதுங்கல்!

மீனவர்கள் அச்சம்



யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல்வேறு கடற்கரைகளில் பிளாஸ்ரிக் துகள்கள் கரையொ துங்கிவருகின்றமை அவதானிக்கப்பட்

15

'வருகினம், பாக்கினம்,
போயினம் ரிப்பீட்டு...
வருகினம், பாக்கினம்,
போயினம் ரிப்பீட்டு...
ஆனா ஒண்டும் நடந்ததா
இல்ல கண்டியளோ...'

15 வீதம்

## அதிகரித்தது மின்கட்டணம் மக்களுக்கு அடித்தது ஷொக்!

கொழும்பு, ஜூன் 12

மின்சாரக் கட்டணம் நேற்று நள்ளிரவு முதல் 15 சதவீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளதாக இலங் கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

15

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில்

## நிர்வாக முறைகேட்டைக் கண்டித்து மருத்துவர்கள் நாளை போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஆதார மருத் துவமனையில் நிலவும் நிர்வாக முறைகேட் டைக் கண்டித்தும், புற்றுநோய்ப் பிரிவை வினைத்திறனாக இயங்குவதற்கு வழிவ கைகளை ஏற்படுத்துமாறு கோரியும் நாளை கவனவீர்ப்புப் போராட் டத்தில் ஈடுபடுவதற்கு அரச

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 11.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4099 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 37 58 59 73 |
| விசேட எழுத்து | K |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 11.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1166 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 05 06 28 42 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 11.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0125 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 1 8 8 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 11.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2205 |
| ஆங்கில எழுத்து | F |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கங்கள் | 10 45 50 80 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 11.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5857 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 3 7 1 7 9 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 11.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1887 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 39 55 59 73 |
| விசேட எழுத்து | E |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 11.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0432 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 1 7 9 9 |

# சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த கடும் தீர்மானங்கள் அவசியம்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 12**

**சமூகம் தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டிய நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. குற்றங்களைத் தடுக்கவேண்டிய பொலிஸ் சேவையில் ஒரு சிலர் குற்றவாளிகளைப் பாதுகாக்கின்றனர். சிறைச்சாலை தலைமையகம் சட்ட விரோதமான முறையில் கைதிகளை விடுவித்துள்ளது. சிறந்த மாற்றத்துக்கு அனைவரும் தயாராகவேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சட்டவிரோதமான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு விநியோகத்தைத் தடுப்பது குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும். ஆனால் அந்தக் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பாதாளக் குழுக்களின் தலைவர்களுக்கு சட்ட விரோதமானமுறையில் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு வழங்கியுள்ளது. சிறைக்கைதிகளுக்குத் தேவையான வசதிகள் மற்றும் பாதுகாப்பை வழங்குவது சிறைச்சாலைத் தலைமையகத்தின் பிரதான பொறுப்பாகும். ஆனால் அந்தத் திணைக்களம் சட்டவிரோதமான முறையில் கைதிகளை விடுவித்துள்ளது. வீழ்ச்சியடைந்துள்ள நிறுவனக் கட்டமைப்பை முதலில் மறுசீரமைக்கவேண்டும். சமூகக் கட்டமைப்பு முழுமையாக வீழ்ச்சிய டைந்துள்ளது. சமூகம் மற்றும் சமூகக் கட்டமைப்பிலான நிறுவனங்களை மீண்டும் கட்டியெழுப்பவேண்டும். வரலாற்றுச் சிறப்புகளை மாத்திரம் குறிப்பிட்டுக்கொண்டிருந்தால் சமூகம் என்ற ரீதியில் முன்னேற்றமடையமுடியாது.

சமூகக் கட்டமைப்பில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த கடுமையான தீர்மானங்களை எடுக்கவேண்டும். அவற்றை முறையாக அமுல்ப்படுத்தவேண்டும். சிறந்த மாற்றத்துக்கு அனைவரும் தயாராக வேண்டும்- என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 11.06.2025 | புதன்கிழமை | 0565 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| G | 9 6 3 1 2 3 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.06.2025 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2831 | G | 22 17 38 58 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.06.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| V | 14 28 51 61 | 4992 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.06.2025 | புதன்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 11 13 20 61 | 4543 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 11.06.2025 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| F | 39 | 29 38 60 62 | 2007 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.06.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 09 31 43 56 | 2657 |

| JAYODA DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.06.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 12 37 54 55 | 2134 |

# பதில் அமைச்சர்கள் நால்வர் நியமனம்

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜேர்மனிக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், நான்கு அமைச்சுகளுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் உள்ள டிஜிற்றல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கும், அமைச்சர் விஜித ஹேரத்தின் கீழ் உள்ள வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கும் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சரான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராகவும், டிஜிற்றல் பொருளாதாரப் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, டிஜிற்றல் பொருளாதார பதில் அமைச்சராகவும், பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பாதுகாப்புப் பதில் அமைச்சராகவும், வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (எ-இ)

# அநுராதபுரம் சிறையதிகாரிக்கு விளக்கமறியல் நீடிப்பு

அநுராதபுரம், ஜூன் 12

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகரை நாளை 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி பொதுமன்னிப்பின்கீழ் கைதி ஒருவரை விடுவித்த குற்றச்சாட்டில் குற்றப்புலனாய்வுத்துறையினரால் இவர் கைதுசெய்யப்பட்டார். (ச-இ)

# செம்மணி அகழ்வுகள் தொடர அரசு ஒத்துழைக்கவேண்டும்!

## எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 12

செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடரவேண்டும். அரசாங்கம் உண்மைகளைக் கண்டறிவதற்கான சகல ஒத்துழைப்புகளையும் வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

செம்மணி மனிதப்புதைகுழி அகழப்பட்டபோது அதற்கு அண்மையில் மனிதப்புதைகுழிகள் இருப்பதற்கான ஏதுநிலைகள் காணப்பட்டன என்று செய்திகள் வெளியாகியிருந்தன. கிருஷாந்தி படுகொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் இறுதித் தருணத்தில் தெரிவித்த விடயங்களின் அடிப்படையிலேயே செம்மணியில் அகழ்வுகள் செய்யப்பட்டன. அகழ்வுப்பணிகள்நிறைவடைவதற்கு முன்னதாகவே அந்தப் பணிகள் கிடப்பில் போடப்பட்டன. அதற்குப் பின்னர் பல்வேறு இடங்களில் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. வடக்கு மாகாணத்தில் மட்டும் குறைந்தது 13 இடங்களில் மனிதப்புதைகுழிகள் உள்ளன என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழி அகழ்வுப்பணிகளை நிதியைக் காரணம் காட்டியோ அல்லது வேறு காரணங்களைக் கூறியோ இடைநிறுத்தக்கூடாது. அகழ்வுப்பணிகளுக்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் அரசாங்கம் வழங்கவேண்டும். செம்மணிப்புதைகுழி மட்டுமல்ல ஏனைய புதைகுழிகளிலும் அகழ்வுப்பணிகளை முன்னெடுக்க வேண்டும். உண்மைகள் கண்டறியப்படவேண்டும் - என்றார். (எ-இ)

# சிறைச்சாலை ஆணையாளரின் சம்பளம் குறைப்பு

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை ஆணையாளர் துஷார உபுல்தெனியவின் சம்பளத்தில் பாதியை வழங்க அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, அவரது விளக்கமறியல் காலம் வரையில் அவருக்குப் பாதி சம்பளம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாநகரசபையை கைப்பற்றியது தமிழரசுக்கட்சி

மட்டக்களப்பு, ஜூன் 12

**மட்டக்களப்பு மாநகரசபையின் எட்டாவது முதல்வராக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உறுப்பினரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான சிவம் பாக்கியநாதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பிரதி முதல்வராக தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த வை. தினேஸ்குமார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.**

மட்டக்களப்பு மாநகரசபைக்கு முதல்வர் மற்றும் பிரதி முதல்வரைத் தெரிவுசெய்யும்வகையிலான அமர்வு நேற்று கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

இதன்போதுமுதல்வரைத்தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டநிலையில், இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிவம் பாக்கியநாதனை அதே கட்சியைச்சேர்ந்த மாசிலாமணி சண்முகலிங்கம் முன்மொழிய ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த ந. ரகுபரன் வழிமொழிய, வேறு தெரிவுகள் இன்மையால் அவர் ஏகமனதாக மட்டக்களப்பு மாநகரசபை முதல்வராக தெரிவு செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து, இன்னுமொரு தெரிவாக முன்னாள் மாநகரப் பிரதி முதல்வர் க. சத்தியசீலனை சுயேச்சைக்குழு உறுப்பினர் சீ.ஜெயந்திரகுமார் முன்மொழிய வி.சசிகலா வழிமொழிந்தார். அதன்பிரகாரம் பிரதி முதல்வர் தெரிவு தொடர்பில் வாக்கெடுப்பு நடத்துவதற்கான அறிவிப்பு விடுக்கப்பட்டது.

அந்த அடிப்படையில் வாக்கெடுப்பு இரகசிய முறையிலா, பகிரங்கமுறையிலா என்பதற்கான உறுப்பினர்களின் விருப்புக் கோரப்பட்டது. அதன் பிரகாரம், 22 உறுப்பினர்கள் பகிரங்க வாக்களிப்புக்கு விருப்புத்தெரிவித்திருந்த நிலையில் பிரதி முதல்வருக்கான வாக்கெடுப்பு பகிரங்க முறையில் நடத்தப்பட்டது.

இதன்போது வை.தினேஸுக்கு ஆதரவாக 18 வாக்குகளும், க.சத்தியசீலனுக்கு ஆதரவாக 4 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் 12 பேர் நடுநிலைமை வகித்தனர். பிரதி முதல்வராக வை.தினேஸ் தெரிவுசெய்யப்பட்டார். (ச-இ)

## அச்சுறுத்தல் ஏற்பட்டால் மட்டுமே யூத ஆலயங்கள் மீது நடவடிக்கை

சட்டவிரோத யூத வழிபாட்டுத் தலங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என புத்தசாசன மற்றும் கலாசார விவகாரங்களுக்கான பிரதியமைச்சர் கமகெதர திசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இஸ்ரேலியர்களின் வழிபாட்டிடங்கள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை மத நிறுவனங்களாகப் பதிவுசெய்யப்படவில்லை; அங்கு யூதமத வழிபாடுகள் இடம்பெற்றுவருகின்றன. நாட்டின் பாதுகாப்புக்கோ அல்லது பொதுமக்களுக்கோ அசௌகரியம் ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்றால் மட்டுமே நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியும் - என்றார். (ச-25, 6)

## கோப்பாய் பிரதேச கூட்டம் மின்தடையுடன் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூன் 12

கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று கோப்பாய் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

காலை 9:30 மணியளவில் குறித்த கூட்டம் ஆரம்பமான நிலையில் 30 நிமிடங்களுக்குத் திடீரென மின்தடை ஏற்பட்டது. அதனால் சிறிது நேரம் ஒலியமைப்பு இன்றி, காட்சித் திரையிடலின்றித் தரவுகள் வாசிக்கப்பட்டு ஒருங்கிணைப் புக் குழுக்கூட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-125)

### கோப்பாயில் ஜனவரிமுதல்

## 300 குடும்பங்களுக்கு குடிதண்ணீர்த் திட்டம்!



யாழ்ப்பாணம், ஜூன் 12

கோப்பாய் பிரதேசத்தில் 300 குடும்பங்களுக்கு ஜனவரி மாதம் முதல் குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் பொறுப்புவாய்ந்த அதிகாரி அ. ஜெபநேசன் தெரிவித்துள்ளார். ஆயிரத்து 400 குடும்பங்களைக் கொண்ட கோப்பாய் தெற்குப் பிரதேசசெயலர் பிரிவுக்கு குடிதண்ணீரை வழங்கும் முகமாக முதற்கட்டமாக 300 குடும்பங்களுக்கு ஜனவரி மாதம் முதல் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கென 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)

## நகர்வதற்கு மறுக்கும் கோப்பாய் பொலிஸ்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு மாற்றுக் காணி வழங்கப்பட்டபோதும் கோப்பாய் பொலிஸார் தொடர்ந்து தற்போது பொலிஸ் நிலையமுள்ள தனியார் காணிகளைவிட்டு அகல மறுக்கின்றனர் எனக் கோப்பாய்ப் பிரதேச செயலர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோப்பாய்ப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். கல்வியங்காடு கிராம அலுவலர் பிரிவில் 9 தனியாரின் வீடுகளைக்கொண்ட 2.77 ஏக்கர் காணியை சுவீகரித்தே கோப்பாய் பொலிஸ் நிலையம் தற்போது அமைந்துள்ளது. குறித்த காணியின் உரிமையாளர்களால் தற்போது நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில் 1.25 ஏக்கர் மதிக்கத்தக்க மாற்று அரச காணியை வழங்கியுள்ளபோதிலும் அவர்கள் குறித்த காணிக்குச் செல்லமறுக்கின்றனர். எனவே இதுகுறித்து ஒரு தீர்க்கமான முடிவினை எட்டவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)




## 'லெக்கங்கிகட்டவையும் வேகாத பருப்பும்'

சொந்தக்காசில தங்களுக்குத் தாங்களே சூனியம் வைக்கிறதில வீட்டுக்கட்சிக்காரர்தான் வின்னர். பார்லிமெண்ட் எலக்சனில கவிண்டு கொட்டிண்ட கட்சிக்கு, உள்ளூராட்சித் தேர்தலில் சனம் பாவம் பார்த்து போனால் போகட்டுமெண்டு வோட் பண்ணினால், இப்ப கெப்பர் ஏறிப்போய் நிக்கினமாம். அதாலதான் கண்கடை தெரியாமல், தாங்கள் செய்யிறதையெல்லாம் சனங்கள் வாய்பொத்திக்கொண்டு பார்க்கோனும் எண்டும், தங்களுக்கு ஆரும் வகுப்பெடுக்கத் தேவையில்லை எண்டும் பப்ளிக்காச் சொல்லுகினம். ஆனால் மேல் மட்டத்தில 'பதில் பதவியளை' இறுக்கிப் பிடிச்சுக் கொண்டிருக்கிறவையின்ர ஆட்டத்துக்கு எல்லாரும் ஆடாயினம்தானே. அப்பிடி தங்கட சொல்லுக்கு ஆடாமல் நியாயப்படி நடக்கிறவையை குழப்படிக்காரர் எண்டு முத்திரை குத்தி, அவைக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கிறம் எண்டு சொல்லிப்போட்டு கட்சியை விட்டே கலைக்கிறதுதான் இவையின்ர வேலை. இப்பிடித்தான் 'சிலைமோகனில இருந்து மாவையர் வரை எல்லாரையும் துரத்திப்போட்டு, பின்கதவால பதில் பதவியளைப் பிடிச்சவை.

ஆனால் அவையின்ர பருப்பு கிளிநொச்சித் தண்ணியில வேகாமல் போட்டுது. அங்கத்தைச் சனம் முழுக்க ஒருபக்கமா நிண்டு இவைக்கு எதிரா நெருப்பெடுத்ததால, கீழ்மட்டக்காரரோட மட்டும் தனகிப்போட்டு 'சான்ஸ் வரட்டும்' எண்டு காலைவாருறதுக்குக் காத்திருக்கினம். இப்ப இந்தப் 'பதில்பதவிக்காரரின்ர' பருப்பு திருகோணமலையிலும் வேகாமல் தேறினதால, அவையையும் குழப்படிக்காரர் லிஸ்டில போட்டு, அவைக்கும் 'ஒழுக்காற்று விசாரணை' எண்ட குளிசையைக் குடுக்க பிளான் பண்ணுகினமாம். ஆனால் திருகோணமலைக்காரர் செய்யிறதில ஒரு சொட்டுப் பிழையும் இல்லை. அங்க இருக்கிற திருகோணமலை மாநகரசபைக்கும், நகரமும் சூழலும் பிரதேசசபைக்கும் கட்சிக்காக இவ்வளவுகாலமும் பாடுபட்ட, சனத்தின்ர செல்வாக்கு உள்ளவைக்குத்தான் தவிசாளர் பதவி எண்டு வாக்குக் குடுத்தவை. அவையும் தீயா வேலை செய்து, வீட்டுக்கட்சிக்கு வெற்றியும் வாங்கிக் குடுத்திட்டினம். ஆனால் வெண்டபிறகு உந்தப் 'பதில் பதவிக்காரர்' தங்கட விளையாட்டைக் காட்டப்போய், அங்க வாங்கிக்கட்டிக்கொண்டு வந்தவை.

தங்களுக்கு செம்படிக்கிறவையைத்தான் திருகோணமலை மாநகரசபைக்கும், நகரமும் சூழலும் பிரதேசசபைக்கும் தவிசாளர் பதவி எண்டு ரண்டு பேரை உந்தப் பதில்பதவிக்காரர் சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் சொன்ன ரண்டு பேரும் கட்சிக்காக ஒரு துரும்பைக்கூட தூக்காதவை. அதோட அவை போகாத கட்சியில்லை, அடிக்காத செம்புமில்லை. அப்பிடி எல்லாக் கட்சியளின்ரயும் காலைப் பிடிச்சவைக்கு தலைமைப் பதவி குடுக்கிறதை இவ்வளவு நாளும் கட்சிக்காகவும், சனத்துக்காகவும் உழைச்சவை எப்பிடிப் பொறுப்பினம்? (இதைப்பற்றி மே 16 ஆம் திகதியும் பட்சி சொல்லியிருந்தது) அவையின்ர பக்கம் நியாயம் இருக்கிறதால மாவட்டக் கிளைத்தலைவரும் பதில் பதவிக்காரருக்கு எதிராத் திரும்பிட்டார். இப்ப அவருக்கும் ஒழுக்காற்று விசாரணை எண்ட நாணயக்கயிறு குத்தப்பாக்கினம். ஆனால் அவர் சம்பந்தருக்கே சரி, பிழை சொல்லி கெத்துக்காட்டின ஆள். அப்பிடிப்பட்டவர் உந்தப் பதில் பதவிக்காரருக்கு பம்முவாரோ? கிளிநொச்சி மாதிரி அங்கையிருந்தும் பதில் பதவிக்காரருக்கு மேல ஒரு பாய்ச்சல் இருக்குக் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவுதருவார். வாழ்க்கைத்துணை வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**இடபம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டியநாள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டி இருக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வாழ்க்கைத் துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது ஆறுதலாக இருக்கும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** உற்சாகமானநாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையாக இருப்பது அவசியம்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமுடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பயணத்தால் ஆதாயம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. தாயின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

**விருச்சிகம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பிற்பகலுக்குமேல் மற்றவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** அனுகூலமான நாள். ஆனால்,புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**மகரம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். அரசாங்கக் புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சியும் உற்சாகமும் பெறுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

# சின்னம் வடிவமைப்புப்போட்டி முதல்பரிசு 1000 டொலர்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

மக்கள் வாக்கெடுப்பு இயக்கத்தின் சின்னத்திற்கான வடிவமைப்பு போட்டி ஒன்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் நடத்தப்படவுள்ளது.

குறித்த போட்டியில் உருவாக்கப்படும் சின்னத்தில் பின்வரும் குறிப்புகள் பிரதிபலிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரம், சுயநிர்ணய உரிமை, ஜனநாயகம் மற்றும் இலங்கைத் தீவின் வடகிழக்குப் பிராந்தியத்தின் புவியியல் இருப்பிடம் மற்றும் "தமிழர்களின் முடிவெடுக்கும் உரிமை" "TAMILS RIGHT TO DECIDE" என்ற இரு வசனங்களும் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சேர்க்கப்படவேண்டும்.

சின்ன வடிவமைப்புக்கான விதிமுறைகளாக, சின்னம் சிறியது முதல் பெரியது வரை பல்வேறு அளவுகளில், உரை உட்பட தெளிவாகப் படிக்கக்கூடியதாக இருக்க வேண்டும், சின்னம் பல வண்ணங்களில் (மஞ்சள் மற்றும் சிவப்பு நிறங்களுக்கு முக்கியத்துவம்கொடுக்கப்படவேண்டும்) இருக்கவேண்டும், சின்னம் சதுர அல்லது வட்ட வடிவத்தில் இருக்கலாம். சின்னம் முற்றிலும் தனித்துவமான சொந்தப் படைப்பாக இருக்கவேண்டும், சின்னம் உயர் தெளிவுத்திறன்கொண்ட வடிவத்தில் (JPEG, PNG அல்லது VECTOR கோப்புகள்) சமர்ப்பிக்கப்படவேண்டும். இந்தப் போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு முதல் பரிசாக 1,000 அமெரிக்க டொலரும் இரண்டாவது பரிசாக தலா 5 பேருக்கு 100 அமெரிக்க டொலரும் வெற்றிப்பரிசாக வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆக்கங்களை சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 15.06. 2025 என்பதுடன், PMO@TGTE.ORG எனும் மின்னஞ்சலுக்கு இந்த ஆக்கங்களை அனுப்பிவைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் அனைவரும் பங்குபெற்றமுடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச)



அமரர்கள் நடராசா ஞானபூரணம், பாலசிங்கம் சிவபாக்கியம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. கனடா நாட்டில் வசிக்கும் ந.சிவநாதன் என்பவரின் நிதியுதவியில் ஆலயப் பரிபாலன சபையினரால் கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய தேர்த்திருவிழா அன்று அவை வழங்கிவைக்கப்பட்டன. (ச-25, 17)



# கட்டுப்பாட்டுக்குள் மடிச்சுக்கட்டித்தாக்கம்

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி மாவட்டத்தில் தத்தி, மடிச்சுக்கட்டி ஆகிய நோய்த்தாக்கங்கள் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக செய்கையில் தத்தி, மடிச்சுக்கட்டி என்பன தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இதுகுறித்து முறையான விழிப்புணர்வு நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டது. இந்தநிலையில் தற்பொழுது குறித்த நோய்தாக்கங்கள் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ச-41-125)

# ஆசிரியர்களுக்கு செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் வடமாகாண அந்தந்தக் கல்வி வலயங்களால் நடத்தப்பட்டுவருகின்றன. இந்தவருட இறுதிக்குள் ஒவ்வொரு பாடத்துக்கும் ஐந்து செயலமர்வுகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு திணைக்களத்துக்கும் ஒதுக்கப்படும் நிதி நவம்பர் மாத இறுதிக்குள் நிறைவடைய வேண்டுமென மாகாண ஆளுநர் அறிவுறுத்திய நிலையில் வலயங்களால் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளை நடத்தப்படுகின்றன. இதே வேளை, செயலமர்வுகளை சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் நடத்தாமல் வேலை நாள்களில் நடத்துவதாக ஆசிரியர் [illegible] தெரிவித்தனர். (ச-25.2)



# பூநகரிப் பிரதேசசபை கன்னியமர்வு ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசசபையின் முதலாவது கன்னியமர்வு சபையின் தவிசாளர் சிவகுமாரன் சிறீரஞ்சன் தலைமையில் நேற்று ஆரம்பமாகியது. 20 உறுப்பினர்களைக்கொண்ட பூநகரிப் பிரதேசசபையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பாக 10 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தி சார்பாக மூன்று உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி சார்பாக மூன்று உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி சார்பாக ஒரு உறுப்பினரும், அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் சார்பாக ஒரு உறுப்பினரும் சுயேச்சைக்குழு சார்பாக ஒரு உறுப்பினரும், சுயேச்சைக்குழு-2 சார்பாக ஒரு உறுப்பினரும் இடம்பெற்றுள்ளனர். (ச-41-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு போஷாக்கு
# வீட்டுக்கு குணநலன்

எமது பாற்பண்ணையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் எமது வளமான புல்நிலங்களின் நலனைக் கொண்ட செழுமைமிகு பசும்பாலினால் தயாரிக்கப்படும், போஷாக்கு மற்றும் நம்பிக்கை நிறைந்த, ஈடிணையற்ற உயர்தரத்திலான பாரிய உற்பத்தித் தெரிவுகளுடன், நாட்டுக்கு போஷாக்கும் வீட்டுக்கு குணநலனும் கொண்டுவரும் கொத்மலே.



A QUALITY Cargills PRODUCT

Kotmale

நம் நாட்டின் போஷாக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 05 . 1930



மறைவு 07 . 06 . 2025

## பொன்னுத்துரை செல்வராணி
### (பொன்னம்பாள் அக்கா)

உடையார் லேன் கொக்குவில்லைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை செல்வராணி (பொன்னாம்பாள் அக்கா) அவர்கள் (07.06.2025) அன்று சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணவர் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்கனை சிதம்பரப்பிள்ளை - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், ரஞ்சன் (ஓய்வு பெற்ற பலநோக்கு சங்க ஊழியர் நல்லூர்), கணேசன் (இத்தாலி), அசோகன் (இத்தாலி), சிவனேஸ்வரி (ராஜி, ஜேர்மனி), சர்வேஸ்வரி (செல்வி, சுவிஸ்), திவாகரன் ( திவி, இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மபாலினி, தாரணி, பாலச்சந்திரன், ராகுலன், லோஜினி, ஆகியோரின் அன்பு மாமியும், மதுரா, தாட்சாயினி, ஜனனி, சேயோன், சாரங்கன், சாருஜா, அபிராமி, அஞ்சலி, அபிராஜ், அஞ்சனா அக்சயன், அக்சயா ஆகியோரின் அன்புப் போத்தியாரும், வர்ஷா, அக்சயன், அத்விகா, சஷ் விகன், கேலின் கணேசன் லெனின், யஷ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (13.06.2025) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(CS/3381) D*

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 03 . 1930



இறப்பு 07 . 06 . 2025

## பாலசிங்கம் நேசமணி

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வதிவிடமாகவும் கொண்ட பாலசிங்கம் நேசமணி அவர்கள் கடந்த (07.06.2025) சனிக்கிழமை அன்று டென்மார்க்கில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான உடையார் சின்னத்தம்பி - சிவக்கொழுந்து தம்பதியின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற பாலசிங்கம் கனகசபையின் அன்பு மனைவியும், அம்பிகா, காங்கேயன், அனுசியா, பாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, பொன்னுச்சாமி, தர்மராஜா, மனோன்மணி, மற்றும் கண்மணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (14.06.2025) சனிக்கிழமை டென்மார்க்கில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்
ஆறுமுகம் பரமசிவன்
(பெறாமகன்)

# இலக்கியவெளி சஞ்சிகை வெளியீடு

யாழ்., ஜூன் 12 இலக்கியவெளி சஞ்சிகையின் நீலாவணன் சிறப்பிதழின் வெளியீட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அம்மன் வீதி, நல்லூரில் அமைந்துள்ள எங்கட புத்தக இல்லத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வெளியீட்டுரையினை பேராசிரியர் க.ஸ்ரீகணேசனும், சிறப்புரையை பேராசிரியர் வ.மகேஸ்வரனும், மதிப்பீட்டுரைகளை இ.இராஜேஸ்கண்ணன், சி.விமலன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ச-41)

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 03 . 1975



மறைவு 11 . 06 . 2025

## சோதிராணி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோதிராணி சோமசுந்தரம் அவர்கள் நேற்று (11.06.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் புங்குடுதீவு 6ம் வட்டாரத்தை சேர்ந்த காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்- தங்கம்மா தம்பதியின் அன்பு மகளும், சிவராஜா, நாகராணி, சோதிபாலன் (கனடா), சுந்தரலிங்கம், காலஞ்சென்றவர்களான தவயோகராணி ஆகியோரின் அன்பு சகோதரியும், கோமதி, ஜெயானந்தன், சியாமளா, முருகதாஸ் ஆகியோரின் மைத்துனியும் பிரணவி, தனலக்ஷன், சோயினி, கஜானன், யாழினி, எழினி ஆகியோரின் மாமியும், நவாகினி, நவாசினி கஜார்த்தனி, நிந்துஜன் ஆகியோரின் பாசமிகு சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 02.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

83/16 அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 495 5590
077 684 8346

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 02 . 1968



மறைவு 11 . 06 . 2025

## திருமதி சியாமளா சிறீதரசர்மா

ஆவரங்கால் மேற்கு புத்தூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சியாமளா சிறீதரசர்மா அவர்கள் நேற்று (11.06.2025) புதன்கிழமை காலமானார் அன்னார் ஆவரங்கால் சிவன் கோயில் முன்னாள் பிரதம குரு காலஞ்சென்ற வே.நடராஜகுருக்கள் மற்றும் விஜயலட்சுமி அம்மா தம்பதியரின் அன்பு மகளும், பருத்தித்துறை நா.சுப்பிரமணியகுருக்கள்-அமிர்தேஸ்வரி அம்மா அவர்களின் அன்பு மருமகளும், சுப்பிரமணியகுருக்கள் சிறீதரசர்மா அவர்களின் அன்பு மனைவியும், சி.கவிஷ்ணா, சி.ஹறிமேனண், சி.கேதாரன் ஆகியோரின் அன்பு தாயாரும் க.ஹம்ஸத்வனியின் மாமியாரும், ஆருதியின் அன்பு பாட்டியும், சு.நித்தியானந்தி (அல்வாய்), ந.யோகானந்தேஸ்வரகுருக்கள் (ஆவரங்கால் சிவன் கோயில் பிரதம குரு), கி.சுபாசினி (வவுனியா), ஐ.காயத்திரி (ஆவரங்கால்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதாகரகுருக்கள் (அல்வாய்), கிருஸ்ணகுமாரக் குருக்கள் (வவுனியா), ஜனார்த்தன குருக்கள் (ஆவரங்கால்), வத்சலா (ஆவரங்கால்), காலஞ்சென்ற பரமேஸ்வரி அம்மா, பத்மாநாத ஐயர், பாலாம்பிகை அம்மா, ஜெயலட்சுமி அம்மா மற்றும் குணபூசனி அம்மா (மாவிட்டபுரம்)ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் ஆவரங்காலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்ககாக ஆவரங்கால் கரதடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777878531,
0775262073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

கடந்தகால நினைவலைகள் மனிதனை அறிவாளி ஆக்குவதில்லை; வருங்காலம் பற்றிய பொறுப்புணர்ச்சியே அறிவாளிக்கு அடையாளம்.

– பெர்னாரட்ஷா –


# பாரதத்தின் பாசாங்கு!

'பாதிக்கப்பட்ட தரப்பையும், பாதிப்பை ஏற்படுத்தியவர்களையும் ஒரேமாதிரியாக அணுகுவதை நாங்கள் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை' என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர். பஹல்காம் தாக்குதலுக்குப் பின்னர் பாகிஸ்தானைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் இந்தியா ஈடுபட்டுவருகின்றது. எனினும், சில நாடுகள் இந்தியாவையும் பாகிஸ்தானையும் சமனான தராசில் வைத்து இந்த விடயத்தை அணுகத் தலைப்பட்டுள்ளன. இவ்வாறான பின்னணியிலேயே, இத்தகைய கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார் அமைச்சர் ஜெய்சங்கர்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் கருத்து முழுக்க முழுக்கச் சரியானது. இந்த விடயத்தில் அவரின் சிந்தனை அறத்தின் பாற்பட்டது. பாதிக்கப்பட்டவர்களையும், பாதிப்பை ஏற்படுத்தியவர்களையும் ஒரேமாதிரியாக அணுகுவதல்ல அறம். இதைத்தான், 'ஆபிரிக்காவின் நீதவான்' என்று அறியப்படும் பேராயர் டெஸ்மன்ட் டுட்டு முன்பொரு தடவை, 'அநீதியான சூழ்நிலையில் நடுநிலையாளனாக இருப்பதென்பது ஒடுக்குமுறையாளனின் பக்கம் நிற்பதாகும். யானை எலியின் வாலில் தனது காலை வைத்துக்கொண்டு தான் நடுநிலையாளன் என்று சொல்லுவதை, எலி ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை' என்று கூறியிருந்தார். ஆனால், விடயமென்னவென்றால், இந்தக் கருத்தை வெளிப்படுத்துவதற்கு இந்தியாவுக்குக் குறைந்தபட்சத் தகுதியேனும் உள்ளதா? என்பதே.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப்போரில் பிராந்திய வல்லரசு என்ற ரீதியில் இந்தியாவின் தாக்கமும், தலையீடும் மிகவும் அதிகமானது. ஈழத் தமிழர்களின் ஒற்றை நம்பிக்கையாக - இந்தியா இருந்தது, இருக்கின்றது. எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் என்ற ரீதியில் இந்தியாவின் நகர்வுகள் தமிழர்களின் பக்கம் சார்ந்ததாக அமைந்திருக்கின்றனவா? என்ற கேள்விக்கான பதிலைத் தேட வேண்டியிருக்கின்றது. 'பிராந்தியத்தின் நலன்'களை முன்னிறுத்தி கொழும்பைக் குளிர்வித்து இந்த விடயத்தை பூசிமெழுகிக்கொண்டு இந்தியா நகர்கின்றதே தவிர, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கூறியதைப்போன்று, பாதிக்கப்பட்ட மக்களின் தளத்தில் இருந்து அவர்களுக்குச் சார்பாக இந்தியா செயற்பட்டதாக வரலாறேயில்லை.

இறுதிப் போரின்போதும் அதற்கு முன்னதாகவும் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தாயகத்தில் படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காணாமலாக்கப்பட்டனர். போர் என்று முடிவுக்கு வந்ததோ அன்றுமுதல் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பதை வெளிப்படுத்தக்கோரி அவர்களின் உறவுகள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்திவருகின்றனர். ஆனால் அவர்களின் குரல்கள் இந்தியாவின் இரும்பு இதயத்தை எள்ளளவும் அசைக்கவில்லை. குறைந்தபட்சம் 30 ஆண்டுகளாக இந்தியாவில் உள்ள ஈழத்தமிழர்களுக்குக் குடியுரிமை கொடுக்கக்கூட இந்தியா தயாராக இல்லை. உண்மையில் இந்தக் கபட நாடகத்தில் இந்தியா ஆற்றும் வகிபங்கானது கலப்பற்ற பச்சைத் துரோகம்தான். ஈழத்தமிழர்களுக்கு தான் ஆற்றும் துரோகத்தனம் எத்தகையது என்பதை, 'இந்தியா தெரிந்தேதான் செய்கின்றது' என்பதற்கு, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரின் கூற்றுத்தான் சாட்சியும், சான்றும்.



# மு.காங்கிரஸுடன் ஒப்பந்தம் இல்லை

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

**மட்டக்களப்பு , ஜூன் 12**

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒப்பந்தங்கள் செய்திருக்கின்றோம் எனச் சொல்வது அப்பட்டமான பொய் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாங்கள் போட்டியிட்ட அனைத்து சபைகளிலும் தவிசாளர் பதவி எங்கள் கட்சிக்குத்தான் கிடைக்கவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். நாங்கள் சில சபைகளில் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சியமைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. யாழ். மாநகரசபையில் நாங்கள் எங்களுக்குக் கிடைத்த பட்டியல் ஆசனத்தை முஸ்லிம் உறுப்பினருக்கு வழங்கியமைக்காக எங்களுடைய கட்சிக்கு வெளியில் இருப்பவர்கள் விமர்சித்திருக்கின்றனர். ஆயினும் 60 சதவீதமான முஸ்லிம்கள் வாழும் மூதூர் சபையிலே தமிழர் ஒருவரைத் தவிசாளராக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நியமித்திருக்கின்றது-என்றார். (எ-இ)



# தமிழகத்தில் இலங்கையர் கைது

சென்னை, ஜூன் 12

தமிழகத்தின், காரைக்கால் மாவட்டத்தில் உரிய ஆவணங்கள் இன்றி நடமாடிய இலங்கையர் ஒருவரைத் தமிழ்நாட்டுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

காரைக்கால் ரயில் நிலையத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரே அந்த நபரைக் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் கிளிநொச்சியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என்றும், அவரின் பெயர் அஜந்தன் என்றும் தமிழகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2019ஆம் ஆண்டு 6 மாத கால நுழைவிசைவில் இந்தியா சென்ற இவர், நுழைவிசைவுக் காலம் முடிந்ததும் இலங்கை திரும்பாது மேற்கு வங்கம், ஆந்திரா, டில்லி, கேரளா, தமிழ்நாடு எனப்பல இடங்களில் சுற்றித்திருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-இ)

# சிறை மருத்துவர்களால் போலி அறிக்கைகள்!

## விசாரணை நடத்தக் கோரிக்கை



சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் சிறைச்சாலை மருத்துவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் சமல் சஞ்சீவ தெரிவிக்கையில், சிறைச்சாலைகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் சிலர் அரசியல்வாதிகளுக்கும், உயரதிகாரிகளுக்கும் போலியான மருத்துவ அறிக்கைகளை வழங்கிவருகின்றனர். இதனால் அவர்கள் பல விசேட சலுகைகளை அனுபவிக்கின்றனர். எனவே இப்படியான சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும் - என்றார். (ச- 25-6)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை

நாட்டில் பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு ஏற்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன்படி, சிலாபம் முதல் புத்தளம் மற்றும் மன்னார் வழியாக காங்கேசன்துறை வரையிலும், காலி முதல் அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலும் உள்ள கடற்பகுதிகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச–41)

# ஜப்பானிய அரசால் டிஜிற்றல் பணிகள்!

கொழும்பு, ஜூன் 12

இலங்கைத் தொலைக்காட்சிச் சேவையை டிஜிற்றல் மயப்படுத்தும் பணிகளை முன்னெடுப்பதற்காக ஜப்பானியப் பொறியியலாளர் குழுவொன்று இலங்கை வந்துள்ளது. ஜப்பானிய அரசின் உதவியுடன் டிஜிற்றல் மயப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. தொலைக்காட்சி சேவையை டிஜிற்றல் மயப்படுத்துவதனூடாக தெளிவான, தடங்கலற்ற ஒளிபரப்பை வழங்கமுடியுமென வெகுசன ஊடக அமைச்சர் தெரிவித்துள்ளார். இலங்கை தொலைக்காட்சிச் சேவையை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கு உதவியமைக்காக ஜப்பானிய அரசாங்கத்துக்கு தனது நன்றிகளையும் அமைச்சர் தெரிவித்தார். (ச-22.6)



நாளை
வெள்ளிக்கிழமை- வைகாசி 30
13.06.2025
சுபநேரம் : 05.52- 07.22
ராகுகாலம் : 10.22-11.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினேழாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 12 . 1927

மறைவு 03 . 07 . 2007

### அமரர் செல்லப்பா இராசரத்தினம்

அன்பு அப்பாவே எங்களை பாசத்துடன் வளர்த்து கல்விபயிலவைத்து எங்கள் வாழ்வுக்கு ஒளிவிளக்காய் விளங்கிய உங்களை எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் மறக்கமாட்டோம். என்றும் உங்கள் நினைவுகளுடன்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 02 . 1937

மறைவு 23 . 05 . 2024

### அமரர் ஞானசத்தி இராசரத்தினம்

அம்மா நீங்கள் எமைப்பிரிந்து ஓர் ஆண்டு கடந்து சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் என்றும் உயிர்ப்பாய் நிலைத்திருக்கும் காலங்கள் கரைந்தாலும் ஆயிரம் உறவுகள் அருகில் இருந்தாலும் எம் கண்களில் ஒளிரும் உங்கள் அன்பின் திருமுகத்தை எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மறவோம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும் அன்பு மகள்
பவானி (இலண்டன்)

## முப்பத்தாறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 . 05 . 1963

மறைவு 23 . 08 . 1988

### அமரர் இராசரத்தினம் இராஜ்குமார்

எங்களுடன் உடன் பிறந்து குடும்பத்தின் ஒளிவிளக்காய் எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டியாய் விளங்கிய அன்பு அண்ணா ஆண்டுகள் பல கடந்தாலும் உன் அன்பு முகம் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்.

## முப்பத்துமூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 . 09 . 1964

மறைவு 27 . 07 . 1991

### அமரர் இராசரத்தினம் இராஜேந்திரம்

என் அன்பு அண்ணா உங்களை பிரிந்து பல ஆண்டுகள் கடந்தாலும் எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும் அன்புச் சகோதரி
பவானி (இலண்டன்)

(CS/58523) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தேசிய சுற்றாடல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு மூன்று பிரதேச சபைகள் இணைந்து வீதியோரங்களில் உள்ள பிளாஸ்ரிக் பொருள்களை அகற்றும் சிரமதானப் பணியை கடந்த வியாழக்கிழமை மேற்கொண்டன. செம்மணிச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நல்லூர்ப் பிரதேச சபையும், செம்மணி வீதி வழியாக வலி கிழக்குப் பிரதேசசபையும், நாவற்குழி நோக்கி சாவகச்சேரிப் பிரதேசசபையும் துப்புரவுப்பணியில் ஈடுபட்டன. (ச-25,9)

## பல்கலைக்கழக நுழைவு; அதிக பெண்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜீன் 12

2024ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களில் அதிகளவில் பெண்களே தெரிவாகியுள்ளனர் என யாழ்.வலயக்கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி நாடளாவிய ரீதியில் 65 சதவீதமான பெண்களும் 35 சதவீதமான ஆண்களும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர் என்று யாழ்.வலயக்கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-41-22)



சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த தேர்த்திருவிழா கடந்த திங்கட்கிழமை சிறப்பாக இடம் பெற்றது. (ச-25)

ஜனநாயகத் தமிழ்த்தேசியக்கூட்டணியின் சமத்துவக்கட்சி சார்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பூநகரி மற்றும் பருத்தித்துறை ஆகிய உள்ளூராட்சிசபைகளுக்கு தெரிவாகிய உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் தலைமையில் சமத்துவக்கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-25,113)






## கசிப்புக் கடத் [illegible]ல் சகோதரர்கள் [illegible]து

முல்லைத்தீவு, ஜூன் 12

தருமபுரம் புன்னை நீராவிப்பகுதி[illegible]லிருந்து மோட்டார் சைக்கிளில் முல்லைத்[illegible]ப் பகுதிக்குக் கசிப்பைக் கடத்திச்சென்ற ச[illegible]ர்கள் இருவரை புதுக்குடியிருப்புப் [illegible]லிஸார் அண்மையில் கைதுசெய்துள்ள[illegible] புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலைய[illegible]பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த இரகசியத்[illegible]வலுக்கமைய சந்தேகநபர்கள் கைதுசெய்[illegible]ப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து [illegible] லீற்றர் கசிப்புக் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்தப் [illegible]லிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-19)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கம் யூ.என்.டி.பி. நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் மன்னாரிலுள்ள பாடசாலை களில் கடந்த புதன் மற்றும் வியாழன் ஆகிய இரு தினங்கள் மாணவர்கள் மத்தியில் சுற்றுச்சூழல் தொடர்பான கருத்தமர்வுகளை நடத்தியது. (ச-60)



பருத்தித்துறை தும்பளை தம்புருவளை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய கொடியேற்றத் திருவிழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. (ச-22,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்று கூடல்

யா/ வரணி மத்திய கல்லூரியில் 1991 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் முதல் தடவையாக தோற்றியவர்களும் எங்களுடன் இணைந்து கற்று ஆரம்ப மற்றும் இடைநிலை வகுப்புகளுக்கு வேறு பாடசாலை களுக்கு மாறிச் சென்றவர்களும் ஒன்று சேர்ந்து ஒன்றுகூடல் நிகழ்வினை எதிர்வரும் 28.06.2025 சனிக்கிழமை நடாத்தவுள்ளோம். அந்த வகையில் எம்முடன் கற்ற அனைத்து நண்பர்களும் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

ஏற்பாட்டுக் குழு
**0047 790 506 305**
**077 615 9166**

## வலி கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி (வ.து) கிளைக்குழுத் தெரிவு தொடர்பான வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல் தொடர்பான அறிவித்தல்

எமது சங்கத்தில் 31.05.2025 வரை வாக்களிக்க தகுதியுள்ள வாக்காளர் பட்டியல்கள் இயங்கும் கிளைநிலையங்களிலும், இயங்காத கிளை நிலையங் களின் வாக்காளர் பட்டியல்கள் பருத்தித்துறை வீதி புத்தூரில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைக் காரியாலத்திலும் 11.06.2025ல் இருந்து 30.06.2025 வரை காட்சிப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. இப் பட்டியலில் உள்ள பெயர் விபரங்கள் முகவரிகள் தொடர்பான ஆட்சேபனைகள் எதுவும் இருப்பின் 30.06.2025ந் திகதிக்கு முன் செயலாளர் வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி, பருத்தித்துறை வீதி புத்தூர் எனும் முகவரிக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: ஏதேனும் ஆட்சேபனைகள் கிடைக்கப்பெறாதவிடத்து காட்சிப்படுத்தப்பட்ட பட்டியலின் அடிப்படையில் கிளைக்குத் தெரிவுகள் நடாத்தப்படும்.

தலைவர் 12.06.2025 செயலாளர்

## மணி விழாவும் சேவைநலன் பாராட்டு விழா




### செல்வி கமலா வினாசித்தம்பி

பிரதி அதிபர் (SLPS - II)
Sp.Trd. Sc, BA, PGDE (Merit), M.Ed

சேவை விபரம்:


- 26.03.1990 - 28.02.1993 - யாழ்/ கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை.
- 01.03.1993 - 17.02.2010 - யாழ்/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.
- 18.02.2010 - 01.01.2017 - யா/இந்து மகளிர் கல்லூரி.
- 02.01.2017 - 08.05.2022 - யாழ்/ மானிப்பாய் மகளிர் கல்லூரி (உதவி அதிபர்)
- 09.05.2022 - யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி (பிரதி அதிபர்)

நிமிர்ந்த நன்நடையும் நேர்கொண்ட பார்வையும்
நானிலம் மெச்சும் நயமான பேச்சும்
உள்ளம் மகிழ உறவாடும் பாங்கும்
உம்மிடம் நாம் கற்றிட்ட பாடங்கள்

தளம்பல் இல்லாது செயலினை ஆற்றி
தனியிடம் உமக்கெனப் பிடித்திட்ட நங்கையே
தணியாத உம் சேவை தரணியுள்ள மட்டும்
பணிவாகப் பாடுவோம் மறவாமல் உம்மை

வாழ்த்துவோர்:
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி**

(CS/58530) J-1



# குடிதண்ணீர் வசதி கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்.வரணி கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் குடிதண்ணீர் வசதியைச் சீர்செய்யும் முக மாக சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் 3இலட்சத்து 15 ஆயிரம் ரூபா நிதிப் பங் களிப்பில் புதிய குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு கடந்த திங்கட் கிழமை முற்பகல் கையளிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் என்.கண்ணதாசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சந் நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோக னதாஸ் சுவாமிகள் விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை பாடசாலைச் சமூகத்திடம் கையளித்தார். (ச-22,66)

## யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்.

- **திகதி: 23.06.2025**
- **நேரம் : பி.ப.01.45 மணி**
- **இடம் : வித்தியாலய மண்டபம்**

வித்தியாலய பழைய மாணவர்கள் அனைவரும் இப்பொதுக் கூட்டத்தில் கலந்து வித்தியாலயத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்குமாறு அன்புடன் அழைத்து நிற்கின்றேன்.

**குறிப்பு : கூட்டத்தில் கலந்து கொள்வோர் பொருத்தமான ஆடைகளுடன் சமூகமளிக்கவும்.**
**அதிபர்**

## INVITATION FOR BIDS (IFB) TEACHING HOSPITAL, JAFFNA

**பொருட்களிற்கான விலைமனுக்கோரல்**

போதனா வைத்தியசாலையின் பெறுகைக்குழு கடந்த 12.06.2025 அன்று Daily news, Dinakaran மற்றும் Dinamina ஆகிய பத்திரிகைகளில் வெளியிட்ட கேட்புமனு விளம்பரத்தில் கோரப்பட்ட பொருட்கள் தொடர்பான கொள்ளலில் வடபகுதி வர்த்தகர்களும் பங்கேற்குமாறு இத்தால் அறிவித்துக் கொள்கிறோம். (இதனை எமது வைத்தியசாலையின் வலைத்தளத்திலும் பார்வையிடலாம். www.thjaffna.lk )

**பணிப்பாளர் / தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு**

CR/45136) J-1

# கண்ணீர் அஞ்சலி



எமது தர்மகர்த்தா சபை பொருளாளர்
**வடிவேலு சிவஞானம்**
அவர்களின் அன்பு மனைவி
**சிவஞானம் சௌபாக்கியலக்ஷ்மி**
அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோவில்**
**(பன்றிக்கோட்டுபிள்ளையார் கோவில்)**
**தர்மகர்த்தா சபையினர்.**

# மரண அறிவித்தல்



அருட்சகோதரி
**கிறிஸ்ரபெல் இளையதம்பி தி.கு**

யாழ்ப்பாணம், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி கிறிஸ்ரபெல் இளையதம்பி தி.கு அவர்கள் (10.06.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு (14.06.2025) அன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ் திருக்குடும்ப மாகாண இல்லத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி தியோஃவின் குருஸ்
மாகாணத் தலைவி,
[illegible] வீதி
யாழ்ப்பாணம்.

(CS/3379) D

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைகாசிப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 12

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண் பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், வரு டாந்த வைகாசிப் பெருவிழா சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரம மண் டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

திருவாசக முற்றோதல் நிகழ்வை அடுத்து உளவளத் துணையாளர் நா.நவராஜ் "திருவாசகத்தின் மகிமை" எனும் தலைப் பில் சிறப்புரை ஆற்றினார். 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை வெளிவந்த ஞானச்சுடர் சஞ்சிகை யில் கட்டுரைகள் எழுதியவர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். (ச-25,66)





## வேலையாட்கள் தேவை

நொபெல் டவருக்கு கிளீனர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
உணவும் தங்குமிடமும் வழங்கப்படும்.

வீட்டு வேலைக்கு ஒருவர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
உணவும் தங்குமிடமும் வழங்கப்படும்.

தொடர்பு: **077 255 5551**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
1 சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

தொடர்பு: **077 334 1281**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
29 . 08 . 1942



ஆண்டவன் அடியில்
04 . 06 . 2023

### சுப்பையாபிள்ளை கந்தசாமி

(திதி - வைகாசி தேய்பிறை பிரதமை)

நாம் உயர்வுற உம்மை ஏணியாக்கி
மகிழ்வித்து விட்டு எங்கு சென்றீர்? அன்பு அப்பா!
என்றும் மறக்க முடியா மாமனிதரே!
மீண்டும் வந்தீர் ! நம்புகிறோம் !
உம் வழியில் உம் நினைவுகளுடன் நாம் !


கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.
077 228 1881

(CS/58543) J-1

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30 . 05 . 1956



மறைவு
16 . 05 . 2022

கடந்த 16.05.2022 அபரபக்ஷ பிரதமை திதியில்
சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

### அமரர் இராசா பொன்குமார்

ஆண்டுகள் மூன்று இன்றுடன் ஆனதே
காலங்கள் உறுண்டு போனது எப்படி
காரியங்கள் இன்னும் உள்ளத்தில் ஆறாதாம்
கலங்கி நிற்கிறோம் எமை பிரிந்த நாள் முதல்

புன் முறுவல் முகமும் இனிய பேச்சும் காதில் ஒலிக்கிறது
பிரிவுத்துயர் வாட்டி வதைத்தாலும் - உங்கள்
அன்பும் அரவணைப்பும் என்றும் துணையிருப்பதால்
மீளாத்துயில் கொள்ளும் உங்களுக்கு உரித்தாகட்டும்
எங்கள் அஞ்சலிகள் ஓம் சாந்தி சாந்தி

இல.30 சீனியர் ஒழுங்கை
யாழ்ப்பாணம்
077 722 2549

குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு : 06.04.1957 இறப்பு : 04.06.2023

திதி : பிரதமை

### அமரர் சண்முகநாதன் விஜயலட்சுமி

அன்பான மொழி பேசி
உறவுகளை அரவணைத்தீர்
அம்மா என்ற சொல்லுக்கு
அர்த்தமாய் வாழ்ந்திட்டீர்

ஈராண்டு கடந்ததம்மா
ஒரு யுகம் போல் உள்ளதம்மா
நனவு போல் இல்லையம்மா
கனவு போல் உள்ளதம்மா

வாழ்ந்திடும் காலமெல்லாம்
இனி உங்கள் துயரம் தான்
வழிந்தோடும் கண்ணீரை
உங்கள் காலடியில் சேர்க்கிறேன்

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகிறேன் அம்மா

"லிங்க அகம்"
காரைக்கால்
இணுவில் கிழக்கு

உங்கள் பிரிவால் வாடித்துடிக்கும்
குடும்பத்தினர்

(CS 58542) E-1

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 . 08 . 1949



மறைவு
27 . 05 . 2021

### அமரர் வைத்திய கலாநிதி நடராசா கிருஸ்ணராசா (JP)

திதி : வைகாசித்திங்கள் கிருஷ்ணபட்ச பிரதமை
(12.06.2025)

வையகம் போற்றும்
வைத்தியராய் வாழ்ந்து
வானுறையும் தெய்வமாய் இணைந்து
நாட்கள் வாரங்களாகி
வாரங்கள் மாதங்களாகி
மாதங்கள் ஆண்டுகளாகி
ஆண்டுகள் நான்கு ஆகி விட்டன

மனதில் நினைவாய்
நினைவில் நிலையாய்
இதயத்தில் இமயமாய்
எங்களில் இறையாய்
என்றும் வீற்றுள்ளீர்கள்

குடும்பத்தினர்

(CS 58541) E-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 19 • 07 • 1942 |  | 11 • 06 • 2025 |

## விசுவலிங்கம் வைத்திலிங்கம்

மண்கும்பான் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் வைத்திலிங்கம் அவர்கள் நேற்று (11.06.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வமணி (மணி) இன் பாசமிகு கணவரும், சந்திரகுமார், காலஞ்சென்ற ஜெயக்குமாரி, இந்திரகுமார், இராஜகுமாரி, உதயகுமார், விஜயகுமார், காலஞ்சென்ற சிவகுமார், வசந்தகுமார், இரவிந்திரகுமார், சசிகுமார், கிருஷ்ணகுமார், சர்வானந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயலதா, சிவலட்சுமி (பெறாமகள்) ஆகியோரின் சிறியதந்தையும், கலைச்செல்வி, காலஞ்சென்ற பராசலிங்கம், ரோகினி, கனகநாயகம் (குஞ்சன்), மணிமாலா, வசந்தகுமாரி, சுவர்ணா, நிதியா, அமிர்தசுரபி, வினோதிகா, பிரியந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சீவரத்தினம், கேசலட்சுமி, மாணிக்கவாசகர் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, கணபதிப்பிள்ளை, பொன்னுத்துரை, பாலசிங்கம், தளையசிங்கம், அன்னம் மற்றும் தில்லையம்பலம், செல்லக்கிளி ஆகியோரின் மைத்துனரும், தர்ஷிகன் - வோவிதா, நிறோஜன் - ரதிவதனி, சதுர்ஷிகன் - கஜனி, கௌசிகன், கஸ்தூரி - பவதாரகன், மதுசாயினி, பிரியலக்ஷன் - றிபேக்கா, ஜெயலக்ஷன் - சஜீபா, மயூரி - அனோஷியன், சரணியா, ஜானுதி - மோகன்ராஜ், சரத்குமார் - ஜனனி, மதுரா, சஜீவன், வினோதன் - அபிராமி, ரஜிதரன் - கீர்த்தனா, பபிதரன் - கீர்த்திகா, கோபிசியானு, சியாமினி, சாம்பவி - கஜிதரன் , சங்கவி, நிகேஜன், விஷ்வா, விஷால், விஷாலினி, பிரணவி, துஷாரா, பவீனா, மகா, தனுசாந், டன்சியா, டஸ்வியா, இந்துஷியா, நவசாந், தசானா, சஸ்வின், சஸ்திகா, சஸ்நிகா ஆகியோரின் பேரனும், தர்விதா, தர்னியா, திஷா, ஆருத்ரா, பிரஜீனா, ராவணா, அகிஷன், நிலக்ஷனா, அனந்திகா, றிதிஷியா, றிஸ்னிகா, றிஸ்மிதா, றஜினா, றஜினாஸ், றஜினாத், கெல்வின், கெவின், இஷானிகா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2025) வியாழக்கிழமை நண்பகல் 12:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்**

**4ம் வட்டாரம்,**
**மண்கும்பான் கிழக்கு.**

சந்திரன் - 077 248 9134 , இந்திரன் - 076 546 0806
குஞ்சன் - 076 685 4375 , விஜயன் - +33 651 111 101
வசந்தன் - +49 152 345 32786 , சர்வா - +33 651 812 225

(CS/3377) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## தங்கப்பிள்ளை சேனாதிராசா

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வசாவிளான் தெற்கைச் சேர்ந்தவரும், கோண்டாவில் கொட்டைக்காடு வீதியில் வசித்தவரும் ஆகிய தங்கப்பிள்ளை சேனாதிராசா அவர்கள் நேற்று (11.06.2025) புதன்கிழமை தற்போதைய வதிவிடமான கோணப்புலம் வீதி, மல்லாகத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சேனாதிராசாவின் (இ.போ.ச) மனைவியும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு பரமசிவம், ஆச்சிப்பிள்ளை, பரஞ்சோதி, பத்மநாதன் ஆகியோரின் சகோதரரும், செல்வராசா (ஓய்வு நிலை ஆசிரியர்), செல்வராணி, சண்முகராசா (ஓய்வுநிலை இ.போ.ச களஞ்சியப் பொறுப்பாளர்), சற்குணராசா (இ.போ.ச - ஓய்வு நிலை பொறிவலர்), சத்தியராணி (சிரேஸ்ட பதவிநிலை அலுவலர் துணைவேந்தர் அலுவலகம் யாழ் பல்கலைக்கழகம்), சிறிஸ்கந்தராசா (நிர்வாக கிராம அலுவலர் பிரதேச செயலகம் உடுவில்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தி, ஜெயசந்திரகுமார், யமுனா, புவனேஸ்வரி, சிவகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2025) வியாழக்கிழமை முற்பகல் 10:00 மணியளவில் மல்லாகத்தில் அமைந்துள்ள அவரது வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 652 8463

கோணப்புலம் ஒழுங்கை,
K.K.S வீதி, மல்லாகம்.

(CR/45138) J-1



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மந்துவில் வள்ளுவர் முன்பள்ளிச் சிறார்களால் கடந்த வெள்ளிக்கிழமை மரக்கன்றுகள் நடுகைசெய்யப்பட்டன. (எ-25,9)

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 10 . 1944



இறப்பு 08 . 03 . 2025

## அமரர் சௌபாக்கியலக்ஷ்மி சிவஞானம்

கொழும்பு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் 11, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சாங்கீதவித்துவான் சௌபாக்கியலக்ஷ்மி சிவஞானம் 10.06.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - சரஸ்வதி (புகையிரத திணைக்கள எந்திரி) தம்பதியின் மகளும், காலஞ்சென்ற வடிவேல் - பராசத்தி தம்பதியின் மருமகளும், சிவஞானம் (Rtt Production Manager Paranthan Chemicals) அவர்களின் அன்பு மனைவியும், தக்ஷாயினி (Operations Manager Mercantile Security Services Pvt.Ltd) அவர்களின் அன்புத் தாயாரும் விஜயானந்தன் (Assistant Manager Heritage Teas) அவர்களின் அன்பு மாமியாரும் தருண்கார்த்திக் (Jaffna Central College) அவர்களின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான Dr.ஜெகநாதன், கைலைநாதன், புனிதவதி மற்றும் Dr.விஸ்வநாதன் ஆகியோரின் சகோதரியும் மனோரஷிதா, பிரியதர்ஷினி (ஓய்வு நிலை அதிபர்), சசிரூபினி, யோகேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2025) வியாழக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

077 322 4154


தகவல்:
குடும்பத்தினர்



## ஹெரோய்னுடன் கைதானவருக்கு தடுப்புக்காவல்

கெருடாவில் பகுதியில் ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்ட 40 வயதான சந்தேகநபரை பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்துவைத்து விசாரிக்கப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். வல்வெட்டித்துறை பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைவாக கெருடாவில் பகுதியில் 232 கிராம் ஹெரோய்னுடன் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். (ச-125)

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் செல்வமணி

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்வமணி 09.06.2025 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சேதுப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும், தேவராஜா (கொழும்பு), பாஸ்கரன் (சுவிஸ்), அருணா (யாழ்ப்பாணம்), பிரபாகரன் (சுவிஸ்) பாசமிகு தாயாரும் சித்திராதேவி, சரோஜினி, சுதர்சினி, காலஞ்சென்ற இராசலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நடராஜா, பூமணி, சின்ராசா, தியாகராஜா மற்றும் அற்புதராணி, செல்லக்கண்டு ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கிருபாகரன், செந்தூரா, ஜீவிந்தன், விதுர்ஷா, நிரோஜன், சர்மிளா, நதீஸ், ஹம்ஷாயினி, வேணுஜன், ஜனனி, தபேசன், டிசான், பிரியங்கா, அபிநயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் விஸ்மிதா, அகன்யா, நித்விக், சய்விக், டியான், காலஞ்சென்ற ஆத்விக் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.06.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 09.00 - 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இறுதிக்கிரியைகளுக்காக ஆலடி கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 10.07.1938

மறைவு 09.06.2025

m.s Lane
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தொடர்பு:
077 266 8755 தேவராஜா (மகன்)
+41786591776 பாஸ்கரன் (மகன்)
077 670 3123 அருணா (மகள்)
+41791359504 பிரபாகரன் (மகன்)

(CS 58549) E-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தின் மீது நம்பிக்கைகொள்ள சட்டவிரோத விகாரையை அகற்றுக

## த.தே.ம.மு. பொதுச் செயலாளர் கஜேந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

இனவாதம், மதவாதத்தைக் களைந்து சட்டத்தின் ஆட்சியை அரசாங்கம் கொண்டுவரும் எனில், அந்த நம்பிக்கையை தமிழர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். சட்டவிரோதமாக அமைக்கப் பட்டுள்ள திஸ்ஸ விகாரை அகற்றப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றக்கோரி நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட போராட்டத்தில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழ் மக்களுக்கு தற்போதைய அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இல்லை. எமது உரிமைகளைப் போராடியே பெற வேண்டும் என்பதில் மக்கள் தெளிவாக உள்ளனர். இந்தப் போராட்டம் சிங்கள மக்களுக்கோ, பௌத்தத்துக்கோ எதிரானது அல்ல. இது சட்டவிரோதக் கட்டடத்துக்கு எதிரானது.

யாழ்ப்பாண நகர மையத்தில் நாக விகாரை உள்ளது. நயினாதீவில் விகாரை உள்ளது. அவற்றுக்குத் தமிழ் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே விரிசலை ஏற்படுத்தும் வகையில் தையிட்டியில் சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் சட்டத்தின் மீது நம்பிக்கை கொள்ளவேண்டுமானால் இந்தச் சட்டவிரோதக் கட்டடம் அகற்றப்படவேண்டும். ஜனாதிபதி பங்கேற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தையிட்டி விவகாரத்திற்கு ஜனாதிபதியால் பதிலளிக்கமுடியவில்லை. ஏனென்றால் அது சட்டவிரோதம் என்பது ஜனாதிபதிக்குத் தெரியும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிராகப் பொலிஸார் செயற்படுகின்றனர். வெவ்வேறு வழக்குகளில் சிக்கவைத்து காணி உரிமை தொடர்பான போராட்டத்தை மௌனிக்க முயற்சிக்கின்றனர்-என்றார். (எ-26)

# சட்டத்தரணி மீது அவதூறு இளைஞருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாண சட்டத்தரணி ஒருவர் குறித்து பொய்யான தகவல்களுடன், அவருடைய ஒளிப்படத்தினை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு அவதூறு பரப்பிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரின் விளக்கமறியலை எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் மல்லாகம் நீதவான் நீதிமன்று நீடித்துள்ளது.

இணுவில் பகுதியை சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் போலி உறுதிகளை நிறைவேற்றியதாக சட்டத்தரணியின் ஒளிப்படத்துடன் போலியான தகவல்களுடன் சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பியமை தொடர்பில் சட்டத்தரணி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த நிலையில் குறித்த சமூக வலைத்தள கணக்கு உரிமையாளரை 8ஆம் திகதி பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் திங்கட்கிழமை முற்படுத்திய நிலையில், அவரை நேற்றுப் புதன்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுருந்தது. இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், சந்தேகநபரின் விளக்கமறியலில் எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் மன்று நீடித்துள்ளது. (ம-26)

# குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

உலக குருதிக்கொடை தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையும், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகமும் இணைந்து குருதிக்கொடை முகாமொன்றை நடத்தவுள்ளன.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில், நாளை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இந்தக் குருதிக்கொடை முகாம் நடைபெறவுள்ளது. ஆர்வலர்களை இதில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-இ)

**வீட்டுப் பணிப் பெண் தேவை**

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் சிறுவர் பராமரிப்பு, வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை.

**076 578 9372**

# மரக்கடத்தல் முறியடிப்பு; சந்தேகநபர்கள் கைது!



வவுனியா, ஜூன் 12

வவுனியாவில் பல்வேறு இடங்களில் வனவளத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக கடத்த முற்பட்ட முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வனவளத்திணைக்களத்தினரும், விசேட அதிரடிப்படையினரும் இணைந்து ஓமந்தை மற்றும் கூமாங்குளம் பகுதிகளில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் 27 முதிரைக்குற்றிகள் மீட்கப்பட்டதுடன் இருகப் ரக வாகனங்களும் மீட்கப்பட்டுள்ளன. அதேவேளை, வவுனியாவில் மரக்காலையொன்றிலிருந்து அனுமதி பெறப்படாத 13 இலட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மரப் பலகைகள் மீட்கப்பட்டன. மேலும் பறயநாலங்குளம் பகுதியில் காடழிப்பில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வர் கைதுசெய்யப்பட்ட நிலையில் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,110)



தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை [illegible] கல்விப் பணிப்பாளர் பரணிதரன் தலைமையில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் நாவன்மைப் போட்டிகளாக இடம்பெற்றன. (எ-41-159)

**மரண அறிவித்தல்**

**கருணாநிதி இராசமணி**



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கருணாநிதி இராசமணி அவர்கள் கடந்த (10.06.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் 01.07.1938 மறைவு 10.06.2025

தகவல்: பிள்ளைகள்
077 941 5897
077 258 2753

**மரண அறிவித்தல்**

கீரிமலை வீதி பண்டத்தரிப்பை சேர்ந்த **அமுதமணி சதாசிவம்** (இளைப்பாறிய ஆசிரியர்).

அன்னார் காலஞ்சென்றவர்களான தசாசிம் - ஆச்சிமுத்து தம்பதியின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற திரு நவரத்தினம் சீவரத்தினம், திரு செல்வரத்தினம் திருமதி அன்னம், செல்லத்தம்பி, திரு கனகரத்தினம், திருமதி மகிழ் தெய்வேந்திரம், திரு விஜயரத்தினம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் விழாவெளி இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல் குடும்பத்தினர்
தொடர்புக்கு 076 187 3944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடுகளற்ற...

கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் 2 ஆயிரத்து 80 குடும்பங்கள் வீடுகள் அற்ற நிலையில் வாழ்ந்துவருகின்றன என்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இதேவேளை, வீடுகள் இருந்தும் சீரமைக்கப்படவேண்டிய நிலையில் 611 குடும்பங்களும், மலசலகூட வசதிகளின்றி 198 குடும்பங்களும், மின் இணைப்பின்றி 181குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன. மேலும், குடிநீர் தேவைப்படுவோரின் எண்ணிக்கை ஆயிரத்து 647ஆகக் காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம-125)

## தரமற்ற...

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே ரணிலிடம் விசாரணை நடத்தப்பட்டு, வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில், முன்னாள் அமைச்சர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## அடிப்படைவாத...

ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது அமைச்சர் நளிந்த மேலும் தெரிவித்ததாவது:-
தையிட்டி திஸ்ஸ விகாரையில் இடம்பெற்ற வழிபாடுகள் தொடர்பிலும், அதை மையப்படுத்திய பிரச்சினைகள் தொடர்பிலும் நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம். திஸ்ஸ விகாரையிலுள்ள தேரர்கள் மற்றும் கிராம மக்களுக்கு இந்த விடயத்தில் பிரச்சினைகள் இல்லை. ஆனால், சில அடிப்படைவாதக் குழுக்களே அனைத்தையும் குழப்புவதற்கு முயற்சிக்கின்றன. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக இனவாதம் மற்றும் மதவாதம் என்பவற்றைத் தூண்டிவிட்டு மக்களைக் குழப்புவது அந்தக் குழுக்களின் நோக்கமாக உள்ளது. இதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.
நாட்டில் எப்பாகத்தில் இருந்தாலும் ஆன்மீகத் தளங்கள் மற்றும் தொல்லியல் பெறுமதிமிக்க இடங்களை நாம் பாதுகாப்போம். நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் வழிபாட்டுத் தலங்களுக்கு சென்று, வழிபடுவதற்குரிய சுதந்திரம் உள்ளது. அதனை நாம் பாதுகாப்போம். இந்தப் பிரச்சினையை வைத்து அடிப்படைவாத குழுவுக்கு அரசியல் இலாபம் தேடுவதற்கு இடமளிக்கமாட்டோம் - என்றார். (அ-ம-44)

## பொதுமன்னிப்பில்...

ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது, சட்டத்துக்கு புறம்பாக சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் அமைச்சர் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்காக நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட பட்டியலில் பெயர் இடம் பெற்றிருக்காத கைதியொருவர் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இதனையடுத்தே இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இவ்வாறான குற்றச்செயல்கள் மிகவும் நீண்டநாள்களாக இடம்பெற்றுள்ளன. இத்தகைய குற்றச்செயல்களுக்கு எதிராகத் தற்போது முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
சிறைச்சாலைத் திணைக்களத்தில் மட்டுமல்ல ஏனைய திணைக்களங்களிலும் இப்படி நடந்திருந்தால் அவை தொடர்பிலும் விசாரணைகளில் தெரியவரும். தவறிழைத்த அதிகாரிகள்தான் பயப்படவேண்டும். தவறிழைக்காமல், நேர்மையாகச் செயற்படும் அரச அதிகாரிகள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. அவர்கள் சுதந்திரமாகச் செயற்படமுடியும். அரசாங்க அதிகாரிகள் சுதந்திரமாக செயற்படவேண்டும் என்பதற்காகவே தவறிழைக்கும் அதிகாரிகளை அடையாளங்காணும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (அ-ம-44)

## அச்சுவேலி...

நேற்று இடம்பெற்றது. இதன்போதே, பெருந்தொகை மின்சார நிலுவையை இருப்பில் வைத்துவிட்டு, இராணுவம் கட்டடத்தை விடுவித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் மேலும் தெரிவித்ததாவது:-
எமது சங்கத்துக்குச் சொந்தமான காணியும் கட்டடமும் அண்மையில் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டன. ஆனால், ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை மின்சார நிலுவையாக இராணுவத்தினர் விட்டுச் சென்றுள்ளனர். கட்டடப் புனரமைப்புக்கே நிதி இல்லாமல், பிரதேச செயலகத்திடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். இவ்வாறான நிலையில், இராணுவம் மீதம் வைத்துள்ள மின்கட்டணத்தை எம்மால் எவ்வாறு செலுத்தமுடியும்? எனவே, இராணுவமே இந்தத் தொகையைச் செலுத்தவேண்டும் - என்றார்.
இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த கோப்பாய் பிரதேசசெயலாளர் சிவஸ்ரீ, 'இந்த விடயம் தொடர்பில் பலாலி இராணுவக் கட்டளைத் தளபதிக்குக் கடிதம்மூலம் உரிய அறிவுறுத்தலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்' - என்றார். (அ-ம-125)

## அதிகரித்தது...

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் அண்மைக்காலமாக பல்வேறு கருத்துப்பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன. இது தொடர்பில் பல முன்மொழிவுகளையும் இலங்கை மின்சாரசபை முன்வைத்திருந்தது. இவ்வாறான பின்னணியிலேயே, மின்சாரக் கட்டணத்தை 15 வீதத்தால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, இலங்கை மின்சாரசபை 2025ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான மின்சாரக் கட்டணங்களை 18.3 வீதத்தால் அதிகரிக்குமாறு முன்மொழிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## நிர்வாக...

மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் உள்ளதாவது:-
தெல்லிப்பழை மண்ணின் புகழ்பூத்த தெல்லிப்பழை மருத்துவமனை போர் மற்றும் இடம்பெயர்வுகளைக் கண்டபோதிலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அடுத்ததாக வடக்கு மாகாண மக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் மருத்துவமனையாகக் காணப்படுகின்றது. அத்துடன், விசேட பிரிவுகளாக மனநல மருத்துவப் பிரிவு மற்றும் புற்றுநோய்ப் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு அளப்பெரும் மருத்துவப் பணியை ஆற்றிவருகின்றது.
ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக வினைத்திறனற்ற மருத்துவமனை நிர்வாகியின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக மருத்துவமனையில் பல்வேறு நிர்வாகச் சிக்கல்கள் இடம்பெறுகின்றன. அத்துடன் மருத்துவமனை ஊழியர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படவில்லை. இது தொடர்பாக மாகாண மற்றும் மத்திய சுகாதார உயர் மட்டங்களுக்குத் தெரியப்படுத்தி இருந்தோம். ஆனால் இன்றுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. அத்துடன், மருத்துவமனையின் புற்றுநோய்ப் பிரிவு இயங்குவதற்கும் பல்வேறு முட்டுக்கட்டைகள் போடப்பட்டுவருகின்றன. எனவே, இந்த நிர்வாகப் பிறழ்வுகளுக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும், மருத்துவமனையின் வினைத்திறனான செயற்பாடு உறுதிப்படுத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தி எதிர்வரும் வெள்ளிக்கிழமை (நாளை) பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் - என்றுள்ளது. (அ-ம-26)

## பிளாஸ்ரிக்...

டுள்ளது. இந்த விடயம் துறைசார் அதிகாரிகளால் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.
கரையொதுங்கும் பிளாஸ்ரிக் துகள்கள் பிளாஸ்ரிக்கைத் தயாரிப்பதற்காகப் பயன்படும் 'பிளாஸ்ரிக் நர்டில்' என்று அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தத் துகள்கள் சூழலுக்கும், மனிதனுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவல்லன என்பதுடன், மனிதனின் உணவுக் கூறுகளுக்குள் இலகுவாக ஊடுருவும் தன்மையும் மிக்கவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதையடுத்து, இந்த நுண்துகள்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

## நெடியவனைச்...

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்த நெடியவனை சந்திக்கவே, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜேர்மனிக்குச் சென்றுள்ளார் என்று சமூகவலைத்தளங்களில் கருத்துகள் வெளியாவதாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில கூறியுள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே உறுதிப்படுத்தப்படாத இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜேர்மனியில் சான்சலர்தான் அரசாங்கத்தின் பிரதானி. எனினும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஜேர்மனியப் பயணத்தின்போது சான்சலர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை சந்திப்பதற்குரிய ஏற்பாடுகள் இல்லை எனக் கூறப்படுகின்றது. அப்படியானால் இந்தப் பயணத்தில் வேறு நோக்கம் இருக்கக்கூடும்.
எமது நாட்டில் ஜனாதிபதிதான் அரசதலைவர். எனவே, அவர் வெளிநாடு சென்றால் அந்த நாட்டிலுள்ள அரச தலைவரை சந்திக்கவேண்டும். ஐரோப்பாவிலுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களை சந்திப்பதற்கான தனிப்பட்ட விஜயமா இது என்ற கேள்வியும் எழுகின்றது.
புலிகள் அமைப்பின் தலைவர்களுள் ஒருவரான நெடியவன் ஜேர்மனிக்குச் செல்லவுள்ளார். அவர் இலங்கைக்கு வந்து ஜனாதிபதியைச் சந்தித்தால் அது பெரும் பிரச்சினையாகக்கூடும் என்பதால், நெடியவனைச் சந்திக்கவே ஜனாதிபதி ஜேர்மனிக்குச் சென்றுள்ளார் என சில அரசியல்வாதிகளும், சமூக ஊடக செயற்பாட்டாளர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர். அரசியல் களத்தில் உலா வரும் கதைகளே இவை. இவற்றின் உண்மைத்தன்மை என்னவென்பதை ஜனாதிபதியால் மட்டுமே வெளிப்படுத்த முடியும் - என்றார். (அ-ம-44)

## நல்லூரில்...

நல்லூரில் முதல் இரண்டு வருடங்கள், தமிழ் மக்கள் கூட்டணி ஆட்சியமைக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்கும் வகையிலும், ஏனைய இரண்டு வருடங்கள் தமிழரசுக் கட்சி ஆட்சிமைக்க தமிழ் மக்கள் கூட்டணி ஆதரவு வழங்கும் வகையிலும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.
தமிழ் மக்கள் கூட்டணியின் ஆட்சிக்காலத்தில் உபதவிசாளராக தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியும், தமிழரசுக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் உபதவிசாளராக தமிழ் மக்கள் கூட்டணியின் பிரதிநிதியும் நியமிக்கப்படுவதற்கும் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.
இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நல்லூர் பிரதேசசபைக்கு மட்டுமே பொருந்தும் என்றும், வேறு சபைகளில் இணைந்து ஆட்சியமைப்பதாயின் அதுதொடர்பில் தனியான ஒப்பந்தங்களை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும், தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் க.வி.விக்னேஸ்வரனும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.
அத்துடன், ஏனைய சபைகளில் ஒப்பந்தங்களுக்கு அப்பாற்பட்ட ரீதியில் புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படவும் இரு தரப்புகளுக்கு இடையே இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## யாழ்ப்பாணத்துக்கு...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், ஜூன் மாதம் 23ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளார். நான்கு நாள்கள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார். இதன் ஒரு பகுதியாகவே, அவர் யாழ்ப்பாணத்துக்கு ஜூன் மாதம் 25ஆம் திகதி பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தெரியவருகின்றது.
யாழ்ப்பாணத்தில் சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என பலதரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார். அத்துடன், இறுதிப் போரில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பான பொறுப்புக்கூறல் பொறி முறைகள் தொடர்பிலும் அவர் ஆராய்வார் என்று தெரியவருகின்றது.
இலங்கை இராணுவத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுத் தொடர்பில் எதிர்வரும் செப்ரெம்பர் மாத அமர்வில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆதலால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் யாழ்ப்பாணம் வருகின்றமை முக்கியத்துவம் மிக்க விடயமாகப் பார்க்கப்படுகின்றது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் நீதிக்கான கதவைத் திறக்குமா அரசு?

## அருட்தந்தை மா.சக்திவேல் கேள்வி

**கொழும்பு, ஜூன் 12**

**பட்டலந்த அறிக்கையை அரசியலுக்காகத் தூசு தட்டி வெளியே எடுத்தவர்கள், தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு, இனப்படுகொலை விடயங்களைப் பகிரங்கமாகக் கையாள்வதற்கு முன்வர மறுக்கின்றனர் என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியற்கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார். அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- செம்மணிப் புதைகுழியில் கொலை செய்து அல்லது உயிரோடு புதைக்கப்பட்டவர்களின் உடல் எச்சங்கள் தோன்றுகின்றன. இது தொடர்பாக நீதி விசாரணை நடத்தப்படும் என்று நீதி அமைச்சர் குறிப்பிட்டாலும், அகழ்வுப்பணிகளும், ஆய்வு நடவடிக்கைகளும் சர்வதேச நிபுணத்து வம் கொண்டவர்களால் நடத்தப்பட்டால் மட்டுமே நீதி கிடைக்கும். அதற்கான கதவுகளைத் தேசிய மக்கள் சக்தி திறக்குமா? அல்லது நாட்டின் இறையான்மை என்று கூறி நீதிக்குத் தடை விதிக்குமா? என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. தமிழர் தாயகப் பூமியில் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள படை முகாம்கள் அதன் சூழவுள்ள வளவுகள் மற்றும் நிரந்தர கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலப்பகுதிகளிலும் புதைகுழிகள் இருக்கலாம். அந்தப் பிரதேசங்க ளும் ஆய்வுக்கூட்படுத்தப் படவேண்டும். மனிதகுலத்துக்கு எதிரான திட்ட மிட்ட இனப்படுகொலை 2009 இறுதிப்போருக்கு முன்னரும் இலங்கை பேரினவாத ஆட்சியாளர்களால் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டமைக்கு மிக ஆணித்தரமான சாட்சியாகவே செம்மணி புதைகுழி காட்சிதருகின்றது - என்றுள்ளது.

(எ-இ)

# மஹோற்சவம்!

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் (பருத்தித்துறை சிவன் கோவில்) தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16 தினங்கள் இடம்பெறவுள்ளது.

மகோற்சவத்தின் 7 ஆம் உற்சவமான சந்திரசேகர் பட்டம் 23 ஆம் திகதி வியாழக்கிழமையும், பூந்தண்டிகை உற்சவம் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கும், சப்பரதம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கும் பிச்சாண்டவர் உற்சவம் 30 ஆம் திகதி திங்கட்கிழமையும் இடம்பெறவுள்ளது. அடுத்தமாதம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு சித்திரத்தேரேறி அரோகணம் செய்து மறுநாள் புதன்கிழமை காலை 6 மணிக்கு ஆனி உத்தர தரிசனம் இடம்பெற்று காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

(ச-25,100)

# டைனமட் வெடிமருந்துகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரைப் பகுதியிலிருந்து நான்கு டைனமற் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, சம்பவ இடத்துக்கு விரைந்த விசேட அதிரடிப் படையினர் அந்த வெடிமருந்துகளைக் கைப்பற்றியுள்ளனர். சான்றுப் பொருள்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-125)



# 'தென்னாடு' வெளியீடு

'தென்னாடு' 58 ஆவது செய்தியிதழ் வெளியீடு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர். சி. சிறிசற்குணராசா, வலம்புரி பத்திரிகை தலைமை ஆசிரியர் ந. விஜயசுந்தரம், இந்துசமய கலாசார அமைச்சின் முன்னாள் துணை இயங்குநர் சி. சிறிதயாளன், கோண்டாவில் இந்துக் கல்லூரியின் அதிபர் ந. தயாளன், தற்போது பணி உயர்வு பெற்றுள்ள கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் திருமதி கவின்யா நவஜீவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ச- 25)

# கடற்படையினரால் சுற்றுச்சூழல் துப்புரவு

இலங்கைக் கடற்படையினர் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கில், கடந்த 4 ஆம் மற்றும் 5 ஆம் திகதிகளில் அரசுமற்றும்அரசுசாரா நிறுவனங்களுடன் இணைந்து சமூகப் பணியில் ஈடுபட்டனர். இலங்கைக் கடற்படைக் கப்பல் பரகும்பா நிறுவனத்தினால் திருகோணமலைப் பிரதேச செயலகம், மூதூர் மற்றும் சம்பூர் பொலிஸ் நிலையங்களின் உதவியுடன் மூதூர்ப் பகுதியில் தென்னங்கன்றுகள் நடுகைசெய்யப்பட்டன. மண்டைதீவு, காரைநகர், புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, மடகல் மற்றும் நெடுந்தீவு ஆகிய தீவுப் பிரதேசங்க ளில் இலங்கைக் கடற்படைக் கப்பல் நிறுவனங்களின் பங்களிப்புடன், தென்னை மற்றும் முந்திரி மரங்கள் நடுகைசெய்யப்பட்டன. மேலும் அறுகம்பே விரிகுடா பொலிஸ் அதிரடிப் படையினர், கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையம், கல்முனைப் பிரதேச செயலகம் மற்றும் கடலோரப் பாதுகாப்புத்துறை ஆகியவற்றுடன் இணைந்து அறுகம்பே விரிகுடாக் கடற்கரையில் சிதறிக்கிடக்கும் கழிவுகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டது. (ச-25,125)



# கோப்பாய் பிரதேச குழுக்கூட்டம் இரு எம்.பி.க்களே பங்கேற்பு

கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன் மாத்திரமே நேற்று நடைபெற்றது.

இதன்போது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், இராமநாதன் அர்ச்சுனா, இளங்குமரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கும் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் பவானந்தராஜா ஆகியோரைத் தவிர ஏனையவர்கள் கலந்துகொள்ளவில்லை. கூட்டத்தில் பொதுமக்கள்சார் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட நிலையில் மக்கள் பிரதிநிதிகள் வருகைதராமையையிட்டு சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் அதிருப்தியை வெளிப்படுத்தினர். (ச-25,125)

**கம்பி வேலை**
கம்பி வேலை மற்றும் வீம்,
கொலம் என்பன கட்டித்தரப்படும்.
தொடர்பு:- 076 551 3950

**வீடு விற்பனைக்கு**
மானிப்பாய் வீதி
ஆனைக்கோட்டையில் 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள
வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 366 0456

**வேலையாட்கள் தேவை**
சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்புவோர். ஆண், பெண் இருபாலரும் தேவை (சுன்னாகத்தை அண்மித்தோர் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
076 632 3554

**மாபெரும் ROAD SHOW**
எமது Nalin IT Exclusive நிறுவனத்தினால்
இம்மாதம் ஜூன் 12, 13, 14 ஆம் திகதிகளில்
Hikvision, Ezviz Camera களிற்கான 30%
விசேட விலைத்தள்ளுபடியுடன் கூடிய Road Show
நிகழ்வு ஸ்டான்லி றோட் முன்பாக நடைபெறவுள்ளது.
NALIN Technologies Pvt Ltd
No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC)
Contact No - 021 221 0404/ 076 359 4359 Email - nalin@nit.lk

**ஆண், பெண் வேலையாட்கள்**
கீரிமலை, சேந்தன் குளம் பகுதியில் உள்ள கள்ளு ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை ஒன்றிற்கு ஆண்/பெண் வேலையாட்கள் தேவை.
சம்பளம்-1600/= , மதிய உணவு வழங்கப்படும். லேபில் ஒட்டுதல், பெட்டி ஒட்டுதல், தூக்குதல், துடைத்தல், மூடிக்கு பெயின்ற் அடித்தல் போன்ற வேலைகள்
தொடர்பு: 077 711 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.